தமிழ்ப் பொ

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்

துணர் ௨௯

திருவள்ளுவர் யாண்டு ௲௯

விசய—ஆனி

1953—ஜூன்

பொழிற்றொண்டர் கருத்

தி. ஆ. அ. தே. கரந்தைப்

2-D. வித்துவான் தேர்

1953-ஆம் ஆண்டுத் தேர்வுக்குச் செ
யுற்றோர் விபரம் கீழே காட்டியவாறு

	சென்றவர்.	வெற்ற I.	II.	III.
புலவர் முடிநிலை—	17	—	7	9
,, முதல் நிலை—	18	1	3	12
,, புகு முகம்—	18	—	13	—

வெற்றிபெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

துயரம்.

வித்துவான் திருவாளர் ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள்

நம சங்க அன்பரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளரும் ஆகிய வித்துவான் திருவாளர் ஆ. பூவராகம் பிள்ளையவர்கள் 1953, மே, ௨௭-ஆம நாள் புதன் கிழமை மறைந்த கொடுஞ் செய்தி தெரிந்து பெரிதும் துணுக் குற்று வருந்துகின்றோம். சிறந்த தமிழறிஞரும், அன்பரும் ஆகிய இவர்கள் மறைவு தமிழுலகத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

மனையறம்.

வித்துவான் பண்டிதர்

இரத்தினம் அவர்கள் M. A., B. O. L.,

8, 29, 30-ஆம் நாட்களில் இலங்கைத்
திருவள்ளுவர் கழக ஆதரவில் தமிழ்
தலாவது திருக்குறள் மாநாடு நடை
அன்பர் ஒருவர் திருமணத்தில் ஆசிரியர்
ியது.

ருமணவிழாவிற்குத் தலைமை தாங்குவது
கிழ்ச்சியைக் கொடுக்கிறது. முறைப்படி
காட்சி யாவர்க்கும் இன்பமளிக்கத் தக்க
நலத் தொண்டுக்காக அல்லும் பகலும்
—காந்திய வழியினைப் பின்பற்றி நடப்ப
ஆசிரியர்' என அன்பர்களாற் போற்றப்படு
—திருமணஞ் செய்யும்பொழுது எல்லார்தம் உள்ளமும் இன்பமடைவது இயல்பே. இத்தகைய அன்பர் என்னுடைய மாணவர் என்று எண்ணும்பொழுது யான் அடையும் இன்பத்திற் கெல்லையில்லை. தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் பணியில் ஈடுபடுதற்குத் துறவறமே சிறந்த நெறி எனக் கருதி, அதனை மேற்கொள்ள நினைத்தவர், இல்லறத்தின் சிறப்பை யான் நினைவூட்டியதனாலும், காதலின் தூய்மையையும் சிறப்பையும் அறிந்ததாலும் இல்லறம் புக முடிவு செய்து, இன்று அவ்வறத்தை மேற்கொள்ளுதல் கழிபேருவகை பயக்குஞ் செயலாகும். மேலும் இல்லறமே இயற்கை நெறி என்று மக்களுக்குணர்த்திய திருவள்ளுவர் தம் திருநாவிலே—இம் மாநகரில் திருக்குறள் மாநாடு நடக்கும் இக்காலிலே—பல நாட்டறிஞர்களுங் குழுமிய இந்தப் பேரவையிலே இத் திருமணம் நிகழ்வதை நினைக்க நினைக்க மகிழ்ச்சி மிகப்பெறுகுகிறது.

இல்லறமும் துறவறமும் ஒன்றற்கொன்று மாறானவை எனுங்கொள்கை இடைக் காலத்தேற்பட்டது. பல்லாயிர ஆண்டுகளாகச் சிறப்புடன் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள்

போற்றிய நல்லறம்—இயற்கையோடிசைந்த அறம்—இல்லறமே யாகும். இந்த இல்லறத்தின் பெருமையைத் தமிழ்மறை தந்த திருவள்ளுவர் பெருமான் மிகச் சிறப்பாக எடுத்துரைத்துளர்.

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை."

என்பது அவர்தம் வாய்மொழி. இயற்கை நெறியாகிய இல்லறத்தில் வாழ்ந்து தொல்காப்பியனார் கூறுவதுபோல், 'காமஞ் சான்ற கடைகோட்காலை' மேற்கொள்ளும் அறமே தமிழர் கண்ட துறவறமாகும்.

இறவாத இன்ப அன்பைப் பெறுதற்கு வழியாகவுள்ளது இல்லறமே. ஓர் ஆண்மகனும் ஒரு பெண்மகளும் காதலினால் ஒன்றுபட்டு ஈருடற்கு ஓருயிராக இணைந்துவாழும் அன்பு வாழ்வை—இன்ப வாழ்வைவிடச் சிறந்த வாழ்வு வேறுளதோ? அன்பினால் இன்பமடையும் இவ் வாழ்வின் உயர்ந்த நிலையை

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத் துளோருயிர் கண்டனம் யாமின் றியாவையுமாம்
ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பலவன் மலையில்
தோகைக்குந் தோன்றற்கும் ஒன்றாய் வருமின்பத்
துன்பங்களே,

என மணிவாசகப் பெருமானார் விளக்குகிறார்.

ஒருவருக்கு வரும் இன்பத்தையும் துன்பத்தையும் மற்றவரும் தமதாகக் கொண்டு மங்கல வாழ்வை நடத்திவரும் காதலனும் காதலியும்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

என வள்ளுவர் பெருமான் உயர்த்திக்கூறும் மக்கட்பேற்றைப் பெறுகின்றனர். தம் மக்களின் இன்பதுன்பங்களையும் தமதாகக் கொள்கின்றனர். காதலர்தம் அன்பும், உறவும், உள்ளமும் விரிகின்றன. படிப்படியாக மக்கள், சுற்றத்தார், அயலார், ஊரவர், உலகத்தவர் எனபோரிடத்து அன்பு செலுத்து

கின்றனர். உயிர்கள் எல்லாவற்றினிடமும் அவர்களுக்கு அருள் பிறக்கிறது; அவர்தம் காதலன்பு வளர்ந்து வளர்ந்து விரிந்து விரிந்து, அருளாகிறது. தன்னலம் மறைகிறது பிறர் நலத்துக்கு உழைக்கும் மனப்பான்மை தோன்றுகிறது; "எல்லாரும் வாழவேண்டும் எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும்" என விழைகின்றனர். அவர்தம் வாழ்வு அன்பிற் றொடங்கி அருளில் நிலைக்கிறது; இல்லறத்திற்றொடங்கித் துறவறத்தில் முடிகிறது.

இன்பம், துன்பம் என யாம் கருதுவன யாவும் நமது மன நிலையைப் பொறுத்தனவே. காதலன்பினால் துன்பத்தையும் இன்பமாகக்கொள்ளும் மன நிலை ஏற்படுகிறது. "நும்மொடு துன்பம் துணையாக நாடின் அதுவல்லது இன்பமும் உண்டோ எமக்கு" என்று ஒருமங்கை நல்லாள் கேட்கிறாள். காதலருள், ஒருவர் மற்றவருக்காக வாழும் வாழ்க்கை ஏற்படக் கொடை உணர்ச்சி உண்டாகும். இந்தக்கொடை உணர்ச்சியே உண்மைக் காதல் வாழ்வின் உச்சநிலை இஃது ஏற்பட்டால் வையகம் வானகமாக மாறிப் பேரின்பத்தை அளிக்கும். மக்களிடை மாத்திரமின்றி விலங்குகளிடத்துங்கூட இந்தக் கொடை உணர்ச்சி உண்டென நமது புலவர் பெருமக்கள் பாடியுளர்.

ஒரு கலைமானும் அதன் பெண்ணும் தண்ணீர் தேடிச் செல்கின்றன; ஒரு சுனையைக் காண்கின்றன. அதில் மிகக் கொஞ்ச நீர்தான் இருக்கிறது; ஒரு மானுக்கே போதாது. அந்நீர் முழுவதையும் பெண்மானையே குடிக்கச்செய்ய விரும்பியது அந்த ஆண் மான். தான் குடிக்காவிடின் தன் பெண் மானும் குடிக்காது என்பதை அது நன்கு அறிந்துளது. ஆதலினால், தானும் குடிப்பது போலக் கள்ளஞ் செய்து நீர் முழுவதையும் பெண் மானையே குடிக்கச் செய்கிறது. எவ்வளவு உயர்ந்த கொடை! தன தலைவன் குடித்தாற்றான் தானுங் குடிக்கும் இயல்புடைய பெண்மானின் திண்மை நிலை தான் என்னே!.

இந்தக் கதையை மாறன் பொறையன் எனும் புலவருடைய பாட்டொன்று கூறுகிறது.

(89-ஆம் பக்கம் பார்க்க.)

எங்கள் குலம்.

வித்துவான் திரு. பொ. தண்டபாணி, பி. ஏ. புதுவை.

(முற்றொடர்ச்சி: துணர் உகூ—மலர் உ—பக்கம் 57)

இனிக் குறத்தியர்களின் தொழிலைப் பற்றிச் சிறிது கவனிப்போமாக. குறி சொல்லுதல் அவர்கள் தொழில். இத்தொழில் காலத்தாற் பழமையது. எனினும் அதனுல் நன்மையுற்றோர் வெகு பலராதற்கில்லை. ஏன்? சோதிடத்தில் நம்பிக்கை யற்றோர்கள் அதனை வளுக்காதிருக்க வேண்டியன யாவுஞ் செய்தனர். அதனுல் குறத்திமார்கள் யாருக்குக் குறி சொல்லப் போயினும் முதன் முதலில் அவர்களை நோக்கி "அம்மா! என் குறி மோசம் என்னுதே? பரியாசம் செய்யாதே. வீணுன சந்தேகமும் கொள்ளாதே" என்று வினவுவது வழக்கம்.

மேலும் வாசனை நிறைந்த மென்மையான தோலையுடை அழகியமாறர்கள் வந்தணைவா ரென்றுங் கூறுவர். குறி சொல்வதற்கு வேண்டிக் கையை நீட்டச் சொல்வர். மெல்லிய பூங்கோதையின் அழகு நிறைந்த மீனுட்சியம்மையின் கணவரான சோமசுந்தரக் கடவுளை மானிட உருவில் வந்து துணை செய்வார் என்றும் இவ்வாறு பலவும் கூறுவர். நாகும் ஆடையும் கேட்பர். முகக் குறியைக் கவனிப்பர். சிவந்த கைகளின் ரேகைகளைக் கணிப்பர். கவுளி சொல்லுக்குப் பலன் அறிவார். பெண்களுக்கு இடக்கண் துடித்தால் மிகவும் நல்லது. அதனையும் கவனிப்பர். தங்களுக்கு நல்ல வல்லுடலும் உடலுறுப்புகள் யாவும் நலமாகக் கிடைக்கப் பெற்றமைக்கும் என்றுங் களிப்பர். தலைவி தலைவன் இருவரும் அகங்களித்த வண்ணம் வாழ்ந்தார்கள். பழய காலத்தில், சத்தி வழிபாடே தலை சிறந்தது. மீனுட்சி நாயகியையும் மெச்சினர். அவர்களின் தனங்கள் பருத்தன. வலது தனத்தை வடக்கே உள்ள கைலை மலைக்கும் இடது தனத்தைத் தெற்கே உள்ள பொதிய மலைக்கும் ஒப்பிட்டுப் பேசுவர்.

குறத்திமார்கள் வாழ்ந்த காட்டிடை, சிங்கங்கள் பல வாழ்ந்தன. பற்பல பாம்புக் கூட்டங்களும் இருந்தன. ஒரு கணப் பொழுதில், ஆயிரக்கணக்காகப் பாம்புகள் படமெடுத்தாடும். இருப்பினும் அவை யனைத்தும் அம்மையை வணங்கும். அதுதான் மெச்சத்தக்க பகுதி. அத்தகைய மலையின்கண் வாழநேர்ந்த புண்ணியம் குறத்திமார்களுக்கே உரித்தென்க.

நல்ல நிலா நடு இரவு வெப்பம் இல்லை. குளிர ஆரம்பிக்கிறது. இளந் தென்றலும் மெல்ல மெல்ல வீசுகிறது. இந்த நிலையின் இன்பம் எழுதிக்காட்ட முடியுமா? அத்துடன் மேகங்கள் வதிகின்றன. அம்மலையில் அகத்திய மாமுனி வாழ்கின்றார். அவர் அம்மன் பூசைக்காரர். அம்மையோ அருள் நிறைந்தவர். தன்னை வாழ்த்திய யாவர்க்கும் அருளை நிறைய வாரி வாரி வழங்குவர். மலையின் உச்சியிலிருந்து ஓயாது ஓடிவரும் பனிக்கட்டி நிறைந்த வெள்ளருவியைப் போல அவரது அருள் என்றும் வழங்கப்படுகிறதாம். இவ்வளவு நன்மைகள் நிகழும் பொதிய மலையின்கண் குறத்திமார்கள் வாழ்ந்துவருவதற்கு எவ்வளவு புண்ணியம் அவர்கள் செய்திருக்கவேண்டும் பாருங்கள்!

நல்ல கொழுத்த யானைகள் ஓடி விளையாடிச் சந்திக்கின்றன. தமிழினிமையோடு தென்றல் இனிமையும் கலந்து உறவாடுகின்றன. இவற்றை யெல்லாம் கண்டு கண்டு இன்புறும் மக்கள் நல்ல அறங்கள் பலவும் இயற்றுகின்றனர். பஞ்சம் என்பதே யாருக்குந் தெரியாது. வயிறுறச் சோறு நிறைய தரப்படும். மதுரைமா நகர் இத்தன்மையது. அதை விடச் சிறப்புற்றிருப்பது பொதியமலை. எனவே குறத்திமார்கள் குடியிருக்கும் நகரங்கள் யாவும் நலம் பலவாப் பெற்றன என்க.

தென்றல் காற்றுக்கு உற்பத்தியிடம் பொதியமலை என்பர். ஸ்ரீமந் நாராயணனை ஆராதிக்கும் வடதென்கலை

யினர்கள் பயிலுமிடம் அதுவே. மாமுருகன் உள்ளந்தனிலே உவமையிலா ஆனந்தவெள்ளந் ததும்ப விளையாடுமிடம் இவ் வாடல்கள் பெருகுவதற்கு இன்றியமையாத நவரத்தின மணிகள் யாவும் பல்கோடிக் கணக்கில் செறிந்துத் தோன்று மிடமும் அஃதே. எல்லாவுயிர்களையும் ஈன்றெடுத்து முத்தியங் கரைக்குக் கொடுபோகும் அங்கயற்கண் அம்மை உறைவிட மும் அஃதே. குறத்திமார்கள் வாழ்வது அவ்விடத்தேதான்.

பொதியமலையின் சிறப்பை மேலுங் கூறுவோமாக. அகத்தியர் உறைகிறார். அம்பிகையை வணங்கியவண்ணம் வாழ்கிறார். அம்பிகையே உலகமெல்லாம் காக்குந் தொழிலில் ஈடுபட்டிருந்த வண்ணம் இருக்கின்றார். அவர்கள் தலைமீது அழகிய நவரத்தினமும் பொன்னும் வேய்ந்த முடி இருக் கிறது. அஃது ஓர் குடையால் நிழல் தரப்படுகிறது. அவ் வம்மையாரின் திருவடிகள் மெல்லிய சிவந்த தாமரை இதழ் களின்மேல் பதிந்து கிடக்கின்றன. முடியைக் காக்கும் குடை அரசர்க்கே உரியது. எனவே அம்பிகை அரசாட்சி செய் கிறார் என்பதை அக் குடை காண்பிக்கிறது. ஆட்சியின் தன்மைகளை நன்கு கவனிப்போமாக.

மாக்க ளினமுற்றும் மக்கள் இனம்போல் ஒழுகின என்றால் ஆட்சியின் திறத்தை யார்தான் வியக்காதிருப்பர்? கடுமையான யானைகளும் சிங்கங்களும் ஒன்றாய்க் கூடி மகிழ்ச்சியுடன் விளையாடின. கற்பு நிறைந்த பெண் புலியுடன் கடுங்கோப ஆண் புலி கூடி முயங்கிக் கலந்து கலவியில் அயர்ந் தின்புற்றது. வெங்கரடி பெண் மானோடு விளையாடிற்று. பெண்மயிலும் கொடிய பாம்பும் கூடிக் கூடிக் களிப்போடு குதித்து விளையாடின. இன்னன பிற அம் மலையில் நடந்தன. அங்கேதான் எங்கள் குலக் குறத்திமார்கள் வசித்தனர்.

மானிடப் பெண்களின் தனங்கள் தோலும் தசையும் நரம்பும் மென்மையும் இரத்தமும் இளமையும் தோய்ந்தன. இயற்கையாக அவைகளிடத்து எவ்விதப் பிரகாசமும் இல்லை.

ஆனால் தெய்வப் பெண்களிடத்தோ ஓர் விசாலித்த மின்னொளி தங்கள் தனங்களில் தோன்றும். மீனாட்சி அம்மையிடத்தும் அவ் வொளி காணப்பட்டதெனக் கவி கூறுகிறது. அம்மையாரின் தனங்கள் ரவிக்கையையும் கிழித்தெரிகின்ற அவ்வளவு பெரியதாக விம்மி இறுகிப் புடைபெயர்த்திருந்தன என்று கூறப்படுகிறது. அத் தனங்களைத் தாங்கமுடியாமல் அவரது இடுப்பு மெலிந்து காணப்பட்டனவாம். அத்தகைய அம்மையின் அருந்தவப் புதல்வனே நம்மை இக் கலியில் துன்பமில்லாது காத்துவரும் கந்தன் என்க. அந்த மாமுருகனும் நங் கந்தவேளுக் குகந்த எப்போதும் பிடித்தமான பெண்ணை (வள்ளிநாயகியைக்) கொடுத்த குலந்தான் குறத்திமார்களின் குலமென்க.

இனி, குறத்திமார்களின் குலத்தொழிலைக் கவனிப்போம். வைகறைத் துயில் எழுதல் அவர்களின் முக்கிய வேலை. எழுந்தவும் அங்கயற்கண் அம்மையின் திருவடிகளை நினைத்து வணங்கித் தங்கள் தங்கள் வினைகளை அறுத்துக்கொள்வான் வேண்டுதல் தலையாய கடன். இவ்வாறு குறத்தியர்கள் அனைவரும் ஒவ்வோர் காலையிலும் இறைவியை வணங்குதல் அவர்களுக்குற்ற இயல்பினைத் தெரிவிக்கிறது.

பின்பு அவர்கள் தங்கள் வயல்களிலும் தோட்டங்களிலும் பயிர் செய்துள்ள வள்ளிக்கிழங்குகளைத் தோண்டி எடுப்பார்கள். இக் கிழங்கில் சத்துப்பொருள் (Vitamins) அதிகம் உண்டு. பின்பு பூக்கள் கொய்வர். நறுமணங் கமழும் குறிஞ்சிப்பூவும் முல்லைப்பூவுஞ் சேர்த்துத் தொடுத்து மகிழ்வர். பழங்களின் நறிய சாற்றோடு தேன்கலந்து உண்பார்கள். விருந்தினர்களுக்குத் தேனும் தினைமாவும் கலந்து மிகப் பிரியமாக வழங்குவர். பசுந் தழைகளையும் மர வுரிகளையும் ஆடையாக உடுப்பர்.

அவர்கள் காட்டுக்குச் சென்றால் பற்பல சிறிய குன்றுகளைச் சந்திப்பார்கள். நடுக் காட்டகத்தே பற்பல கொடிய

விலங்குகள் ஒன்றோடொன்று மனமுவந்து வாழ்வதைக் காண்பார்கள். வெம்புலி பெண்கரடி பெண்புலி இவற்றோடு நட்பாய் இருப்பதையும், பார்த்துச் செல்வர்.

குன்றுகளின் இடுக்குகளில் தினைகள் விளையும். அவ் விளைச்சலுக்குக் கீழே உள்ள சந்துகளில் வன விலங்குகள் குடும்பஞ் செய்யும். வரிப்புலி கடமானோடு மலைகளிலுள்ள குகைகளில் உறங்குவதையும் கண்டு பயந்து ஓடாது தங்கள் வேலையில் ஈடுபடுவார்கள். கரிய மலையின் உச்சியில் இருந்து வெள்ளருவி குளிர்ந்த ஜலத்தைக் கொண்டுவரும். பற்பல புதர்களிலும், மான், முயல், காட்டுப்பூனை இன்னன பிற மிருகங்கள் உறையும்.

வயல்கள் தோட்டக்கால்கள் முதலிய இடங்களில் பயிர் கள் காய்கறிகள் கீரை இலை முதலியன பயிர்செய்யப்படும். அவற்றை இரவிலும் மனித சஞ்சாரமற்ற நேரங்களிலும் காட்டுக் கருகேயுள்ள காட்டு மிருகங்கள் வந்து அழித்து விடாதிருக்க எல்லாத் திசைகளிலும் சிறிய பெரிய பாறைகள் செழுமும. (சக்திக்கும்) மான்கள் கூட்டங் கூட்டமாய் வந்து போகும். இளம் பெண் யானைகள் வந்து மீளும். இவ்வளவு அரிய காட்சிநிறைந்த குறிச்சிகளில் தான் குறத்திமார்கள் வாழ்வது வழக்கம்.

வெள்ளியங்கிரி பழநிமலை முதலிய இடங்களில் குறவர் கள் அதிகம். முருகப்பெருமானும் அங்கே மனமுவந்து வாழ்கின்றனர். குறவர்கள் மிக அருமையாகப் போற்றிவந்த வள்ளி நாயகியை மணஞ்செய்துகொண்டார். அதன் சார்பில் விளைவுக்காகாத மலை யாட்சியினை அவர்களுக்குக் கொடுப்பா ராயினர். மலைகள் நிறைந்த இடங்களில் வருமானம் குறைவு இயற்கை வளம் நிறைந்த இடங்களில் கிடைக்கும் வசதிகள் அங்கே கிடைக்கா. பொதுவாக மக்களுள் பலர் வறுமை யால் வதங்குவர். அப்போது முருகப் பெருந்தகையை நோவு வார்கள். மாமுருகன் நமது குலப்பெண்ணை மணந்துகொண்டு

அதற்குப் பதிலாக வெள்ளியங்கிரி பழநிமலை முதலிய குன்றுகளின் ஆட்சியினை என்றைக் கிந்தாரோ அன்றிருந்து வறுமை ஆரம்பித்துவிட்டதென்றும் தங்களுக்கும் தங்கள் குலத்தைப் பெருமைப்படுத்திய கந்தவேளுக்குங் கஞ்சிதேடும் பொறுப்பு அதிகரித்ததென்றுங் குறையிரந்து கூறிக் கொள்வர். அவ் வறுமையை அகற்றுவான் வேண்டிக் கற்றுக் கொண்ட தொழில்தான் குறிசொல்லுதலாகும். தலையெழுத்தாக இத் தொழில் தங்கட்கு வந்துற்றமைக்காக சிறிதுங் கவலாது, மக்கள் (குறத்திமார்கள்) அனைவரும் பாண்டி நாட்டின் பல்வேறு ஊர்களுக்கும் போய்க் குறிசொல்லிப் பிழைத்துவருவார்கள்.

அவர்கள் சென்ற பாண்டிநாட்டின்கண்ணுள்ள ஊர்களின் பெயர்களைப் படிப்போமாக :—

(1) மதுரை (2) திருச்செந்தூர் (3) கொடுங்குன்று இதற்குக் கொடுமுடிஎன்றும் வேறு பெயர் இருக்கிறதெனக் கூறுகின்றார்கள். (4) திருப்பரங்குன்றம் (5) திருக்குற்றாலம் (6) திருவாப்பனூர் (7) திருப்பூவணம் (8) திருநெல்வேலி (9) திருவேடகம் (10) திருவாடானை (11) திருக்கானப்பேர் (12) திருச்சுழியல் (13) இராமேச்சுரம் (14) திருப்புத்தூர் ஆய பிற ஊர்கள் என்க.

குறவர்களும் குறத்திமார்களும் இந் நாடுகளில் சென்று வயிறு வளர்க்கும் காரணந் தெரிந்த முருகவேளும் ஆங்காங்கே உறைந்து அவர்களுக்கு வேண்டிய வரங்களை வாரி வழங்குவாராயினர்.

குறிசொல்லுவதற்கு முன் நாவிற் கலைமகளை நற்றுணையாகக் கொள்வர். கலைமகளின் கரங்கள் பொன்வளையல்களைப் பூண்டிருக்கும். பிறகு இலக்குமியை நினைப்பர். பிறகு பிரமன், திருமால் இவர்களையும் துதிப்பார்கள். தேவேந்திரன் அவர் மனைவி முதலிய பல தேவப் பெண்மணிகளையும்

உள்ளுவர். பின்னர்த் தான் குறிசொல்வர், "குறி தப்பாது" என்றும் "பொய்யல்ல" வென்றும் கூறுவர். உலகநாயகனும் முழுமுதற் பெருமானின் மனைவியாம் தடாதகைப் பிராட்டியாருக்கும் குறிசொல்லியதாகவும் அக் குறியின்படி சிவபெருமானே அம்மையாரிடம் வந்து மணஞ்செய்து கொண்டாரென்றும், இருவருக்கும் கற்பின் எல்லைகள் மீறுத இன்ப நுகர்வில் மாமுருகன் அவதரித்தான் என்றும் அவையனைத்தும் தாம் குறிசொல்லியவாறே நிகழ்ந்தனவென்றும் கூறி மகிழ்வர். எனவே அவர்கள் பிறருக்குக் கூறுங் குறிகள் மெய்யே ஆகுமென்றும் வலியுறுத்துவார்கள்.

குறி கேட்பவர்களை நோக்கிக் குறத்திமார்கள் தங்களுக்கு வேண்டியவற்றைக் கேட்டுக்கொள்வர். ஒருவேளை சாப்பாடும் தலைக்கெண்ணெயும், கட்டிக்கொள்ள நல்ல ஆடையும் கேட்பார்கள். இவ்வாறு கேட்பதில் மிக்க விருப்பங்காட்டுவர் முக்காலமும் உணர்ந்து இறப்பெதிர்வு நீக்கி, நிகழ்காலத்தின் சிறப்புகளை நன்கெடுத் தியம்புவர். தடங்கலின்றிக் கூறுவர். தங்கள் குறச்சாதிக்கே அத்தொழில் சாதாரணமானதென்று கூறுவர்.

இதற்கு முன்னரே கூறியுள்ளபடி, குங்குமமுஞ் சந்தனமுங் கலந்து தரை மெழுகுவர். இச்செயல் அவர்கள் வாழ்வின் செழுமையையும இறைவனிடத்துள்ள எல்லையற்ற அன்பின் பெருக்கையும் எடுத்துக்காட்டா நிற்கும். புழுகும் நெய்யுங்கலந்து விளக்கேற்றுவர். நல்ல நறுமலர் மணத்தோடு தூபம் ஊதுபத்தி இவற்றை ஏற்றிவைப்பர். நவரத்தினங்களைப் பரப்புவர். அறுகு சார்த்துவர். தென்மேற்கில் பிள்ளையார் வைப்பர். அங்கயற்கண் அம்மையாரின் திருவடிகளையே பெரிதும் நினைப்பர். மூன்று உள்ளங்கைப்பிடி நெல்லளந்து மூன்று முறங்களில் தனித்தனியே இடுவர். ஒரு முறத்தை முன்னால் வைப்பர். அதிலுள்ள நெல்லளவை மூன்று சிறு கூறுக்கி ஓர் கூற்றினை இரட்டிப்பாக எண்ணத் தொடங்குவர். அப்போது பல்லிசொல்லின் அதன் பயனை ஆய்வர்

மங்கிலியப் பெண்கள் பேசின் மகிழ்வர். ஆந்தை அலறினும், மக்கள் தும்மினும் நல்லதென்பர். எண்ணி முடிந்து ஒற்றைப்பட்டால், நினைத்தகாரியம் சித்தியாகும். அவர்களின் குலதேவதையான கன்னிமாரறியத் தங்கள் குறி பிசகாதென உறுதிகூறுவர்.

குறிகேட்போர்களின் மனமுவக்கும் வண்ணம் இனிய சொற்களைக் கூறுவர். நல்ல நவரத்தினங்களை அவர்கள் கைகள் விரைவில் அணியும் என்றும், நறுமலர்களை இறைவிக்காகக் கொய்யும் புண்ணியம் பெறும் என்றும், வறியோர்க்கீதலாகிய அறத்தைச் செய்யுமென்றும, விபூதி அணிய உதவுமென்றும், புழுகு கையினால் சொக்கேசர் தோள்தடவும் என்றும் அம்மையைக் கும்பிடும் என்றும் கூறுவார்கள்.

மேலும், குளிர்ந்த நீரைப் பெரிதும் விரும்பும் இறைவன் மதுரைக்கண் சொக்கேசன் என்ற பெயரோடு வீற்றிருந்து கற்புடைய மங்கையரின் மனத்தெழு உம் எண்ணங்களையெல்லாம முடித்துவைக்கிருன் என்றும், அப்பெருமானர் காலை மாலை இவ்வேளைகளில் வந்து அவர்களுடன் தங்கக் கூடுமென்றும், அவர்களுக்கு நிறைந்த ஆயுளும் தம்பொருள் தம்மக்கள் என்ருற்போல் பெறற்கரிய பிள்ளைகளையும் ஈந்தருளுவாரென்றும், அளவிலாச் செல்வங்களையும் மீனுட்சி அம்மையையும் தந்தருளுவார் என்றும் கூறுநிற்பர்.

பிறகு தங்கள் சொற்கள் யாவும் முழுவலி பெற்றியங்கிப் பயனை உடனே நல்கும் வண்ணம் நினைத்து உலக மாதாவாகிய அங்கயற்கண் அம்மையாரின் சிறப்பியல்புகளை எடுத்தோதுவர். அவையாவன:— வெய்யிலின அருமை நிழலில்தான் தெரியும். நாம் வாழும் வீடுகளுக்குக் கூரை போடுவதும் நிழலுக்காகவே. மாடி கட்டுவதும் கதவுகள், பலகணிகள் திரைகள், பந்தர்கள் முதலியன அமைப்பதும் நிழலுக்காகவே. இறைவன் திருவடி நிழலில் உயிர்கள் இன்பமாய் அமர்ந்துள என்று திருநாவுக்கரசர் கூறுகிருர். அவ்வாறே

(தொடரும்.)

இலங்கை நங்கை.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

இடம் : அசோகவனம். **பொழுது : காலை.**

புலிக்குழு நடுவின் புல்வாய் போன்று
நலியுறு துணுக்கால் நடுக்கமுற்றது போல்
வெந்தபுண்ணிற் வேல்புகுந்தாற் போல்
நொந்துமனம் வீணே நோதலென் வேண்டும்.
மண்ணுன வாழ்விலும் மண்ணும் பயனிலை.
இன்பமும் துன்பமும் இவ்வுலக வாழ்க்கை
அன்போ டியற்றும் அனைவர்க்கு முரித்தே.
பூவுந்தழையும் போன்ற இவ்விரண்டுமே
காலமொடு துக்கப் புள்ளியைக் கொண்டு
கோலமொடு சுழன்று குவலயம் அறியும்
படைப்பையும் இறப்பையும் பகர்ந்திடுங்காலை
நடைப்புறு இன்ப துன்பத்தின் நடையில்
கொடைப்புறு துக்கமே கொடுக்கும் நல்லுணர்ச்சியை
தூண்டு மாற்றல் தொகுதியை யுடையதே.
அம்ம ! நினது அழகிய குரலின்
செம்மை நிலையை சிதைத்த துன்பத்தை
கண்டு என்னுளம் கலக்கத் துயர்ந்ததே.
துன்பத்தினிடத்தே ஊமைத் துக்கம்
என்பதிருண்டு நிலைத்துப் பிரிந்தும்
வன்புவியோரின் வாழ்க்கையி லிலங்கும்.
இப்பெருந் துன்பத் தியலினின்று
தப்ப நாமறியும தகுதி யாதெனின்
உண்மை அடக்கம் என்று நன்குணர்க.
பெண்மைக் கணி கலமாகிய அம்ம !
துக்க மென்னும் செங்கல்லினாலே
தக்க முறையில் தகர்ந்திடா வண்ணம்
மனச்செறி வென்னும் மாண்சுதை கொண்டு
கனிவொடு கட்டிய கல் மண்டபமாம
இனிப்புற நாமுமிருக்கு மிவ்வுலகமே.
பொறுத்திரு அம்ம ! பொற்பிலா துன்பப்

பொறையில் நிறைமறை பொலிந்திடும் உண்மைகள்
நிறைந் துயர்ந்து நீண்டொளிர்ந்திடுமே.
ஏங்கி ஏங்கி ஏனம்மா வீணில்
தூங்காது வாடி துயருறு கின்றாய்!
ஈதெல்லாம் புவியில் இயங்கிடும் பழியே.
அவனன்றி ஓரணு அசையா தெனுமுரை
கவனமறதி யானதோ! கனங்குழாய்!
மணம் புரிந்திட்ட மங்கையரன்றி
குணங்கெடத் தொட்டால் குறித்த நல்லிலங்கை
வேந்தன் சிதைவனென வெகுண்ட யனுரைத்த
ஏந்து நன்மொழியால் இறப்பனன்றோ.
அதனாலன்றோ அன்பு கொடு வேந்தன்
இதங்கெடு சோக மேகிய வனத்தே
நின்னைக் கொணர்ந்து நிலையுறச் செய்து
உன் பெருந் தன்மை உலகோரறிய
புல் பத்தை வேண்டுவோர் பொருந்து மண்வெட்டியால்
கல்லென வெட்டி கருதிய விடத்து
எடுத்துச் செல்லும் இயற்கையி லன்னான்
அடுத்துநின் கற்பின் அழகு கெடாது
கொணர்ந்திங்கு வைத்த கொள்கைய னாகும்.
துணர் இலை சோம்பிச் சுருங்காது
தெளி வுற்றிருக்கும் சேனுயர் வனத்து
களியுடன் குயில் மயில் காதலித்துலவ
சோகமற்று சுகந்தரு சுகத்தின்
பாகு பொன்மொழி பகர்ந்திடக் கண்டும்
ஆகம் தளர்ந்தும அழகது குறைந்தும்
நாகு நயம குன்றி நலிகுவதென்னோ!
மாயையில் வலியர் அரக்க ரென்றறிகுவாய்.
மாயமான் விடுத்தது, மாமிதிலைக்கு
மன்னன்போல் வருத்த வலிமையும் பின்னர்
துன்னரும் நாக பாசத்தால் துணிக்க
அன்னவர் செய்தது அறிந்தனை யன்றோ!
இன்னவா றெல்லாம நின்றனை இசைய
செய்த கோளன்றி செயிர் வேறன்று.

செய்ய நின்மனம் சிதைந்து வருந்தல்
உய்யும் வகைக்கு உறுதிப்பாடன்று.
பெய்யும் அறமே பெருநிலையுற்று
பொய்யாது வெல்லும பொலிவுறு அன்னய்
மாசுண்ட மாமணி ஒளி யிழந்தாற்போல்
தேசிழந்திவணே தேமபிடு வானேன்.
அன்ன மன்னய்! அருந்துயி லற்றயான்
நென்னல் கனவொன்று நினைவொடு கண்டனன்.
அரக்கர் கோனும் அசோக வனமும்
வரப்பெறும் மன்னன் வலியுறு படையும்
பொறுக்கென அழிய புலனுறக் கண்டேன்.
தலையினி லெண்ணெய் தடவி சிவந்த
விலையுடை ஆடை அணிந்து விரிந்த
தலையுடைப் பேய்கள் தானிழுத்துச் செல்லும்
மலைபொரு தேர்மேல் ஏறிமா இலங்கையன்
தென்திசைச் செல்ல சூல்கொடு முகில்கள்
வன்குருதி மழையை வழங்கிப் பொழிந்தன.
விண்ணின் மீன்கள் வீழ்ந்தன பலவே.
நண்ணிடும் விளக்குகள் நன்னிலை கொளாது
அந்தகாரத்தி லமர்ந்து நின்றனவே.
சந்தக் குடங்கள் தாழ்மது குடமாய்
மாறி நின்றியங்கிட மதியுறக் கண்டேன்.
கூறிடு குலத்தொரு பங்கையர் நாண்கள்
பாழுற அறுந்து வீழ்ந்திட பார்த்தேன்.
மயன் மகளாகிய மண்டோதரியின்
நயப்புறும் கூந்தலில் நற்றீபற்றி
காருண்ட மேகம்போல் கருகி வீழ்ந்ததுவே.
சீருறு இலங்கையின் சிறப்புறு அரக்கராம்
மாமதக் கரிகளை வளைந்திரண்டரிகள்
நாமமுறு சமரில் நாசம் செய்தனவே.
அக்காவின் நகரினின்று அழகு மாமயிலொன்று
தக்க முறையில் தண்ணளி யுற்று
மின்னெளி விளங்க வெளி போந்ததுவே.
இந் நிலையிலென்னை எழுப்பினயம்ம!

யான்கண்ட கனவு அருணன் முதலறிய
மான்விழி யன்னுய்! மாறுரு துண்மையே.
இந்த நற்கனவால் இளைஞரொடும் நாயகர்
வந்திடு வரவர்களை வழிநின்று காண
ஆவி காத்திரு அரக்கரின் புன்மைகள்
சாவியாகி தாழ்ந்திடு மம்ம!
நின்றன் கணவன் நின்னைக் காண
கன்றிய மனத்தொடு களிகொடேகுவர்
பொன்னிறவண்டு பொலிவுற இரைந்து
மென்மையோடுனக்கு மெய்யுரை சொலலால்
வன்கணாளரிடத் தினின்று வனப்போடகல
உன்றன் கணவனிட மிருந்துற்ற
வென்றி தூதுவர் விரைகொடு வருவர்.
சிலமுறு பொறுமையே சிறப்பிற் சிறந்தது
போற்ற பொறுத்திரு. புகழுமா மிதுவே.
ஆற்றலுறு அவனியளித்த கற்பகமே!
செம்மையாம் பொறுமைக்கும் சீரிய நின்னிலை
இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்புடைத்தாகும்.

★ பரத சாத்திரம். ★

இந் நூல் நாட்டியம் பழகுபவர்கட்கும், பழக்குபவர்கட்கும் இன்றியமையாத சிறந்த அரிய நூலாகும். 182 பக்கங்கள் கொண்டது. பாவ வியல், இராக வியல், தாள வியல், ஒழிபியல் என நான்கு இயல்களும், தெளிவுரையும், அடிக்குறிப்பும் உள்ளன.

விலை ரூ, 1—8—0.

(அஞ்சற் செலவு வேறு.)

நீத்தல் விண்ணப்பம்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் உகூ—மலர் உ—பக்கக் 53.)

வலிமிக்குடைய இதமான பகைவராம் ஐம்புலன்களும் என்னைப் பிரணவத்தில் சேரவொட்டாது தடுக்க, அதனுன் சூர்கொண்டு வெகுண்டு நிலை கலங்கினேன்! மலங்கினேன்! வருந்தினேன்! அதனுன் நீயே என் இதயத்தில் தங்கும்படியான நிலையினை ஏற்படுத்திக்கொண்டபின், நீ எக்காலத்தும் என்னை விடற்கரியாய்! மற்றும் நீயே எனது இதயக் குகையின்கண் விடுதி கண்டதினுன், நின் கருணை மட்டுப் பருகி அதனுன் களிப்பு மிகப் பெற்றேன்! இன்பங்கண்டு செய்யவேண்டிய ஞானவினைகளைச் செய்து நின்னை நெருங்குகின்ற மகிழ்வு கொண்டேன்! மன்னிய இன்பமான மகிழ்வால் கெடுதலுண்டாதல் உலக இயல்பாதாதலின், அதனைக் குற்றமாகக் கருதி வெறுக்க, நாதபிந்து நிறைந்த நின்விரை மலர்த்தாளினை பண்டு காட்டிக் கொடுத்தது போல் ஞானத்தொண்டு செய்யும் என்னைக் கொண்டு குற்றமாய குதுகுதிப்பினை நீக்குவாய்! களிப் பற்று நின்று நினது குறிப்பாகிய திருவடிக்கண் என் குறிப்பாகிய விழியையும் மனதையும் இயைந்து ஒன்றுபடும்படி ஒழுகச் செய்து நடுக்கமுறும் என்னை விடுதிகாண்! ஆனுல் என்னுள்ளத்தைக் கனிவுடன் குழைத்து பக்குவமாக்கியும், பசுகரணத்தை பதிகரணமாக்கியும் நின் திருவுள்ளக் கருத்திற்கு இயைய ஒழுகும் காலம் எனக்கு நடுக்கமின்றி எதிர்வதெப்போது?

இடர்ப்படுத்தும் இருவினையினை யுடையேன் உள்ளம் நடுங்க, குண்டலி சக்தியினுல் மறைபட்டிருக்கும் இறை என் இதயக் குகையாகிய பொதும்பில் ஒளிந்துகொள்வது

போன்று எனக்கு புலப்படுகின்றதே! மரத்தின் பொந்திற் பட்ட தீ எறிவதுபோன்று என்னில் புகையோடு கூடிய கனல் எரிய, நினையப்பிறருக்கரிய அக் கனல் பெருகி புலனேடு கூட, ஞானவினைகளைப் புரியும் யான் அதனுல் அல்லலுற்று அழுங்குகின்றேன்! யானியற்றும் ஞானகர்மத்தாலன்றி வினைகள் ஒழிய வேண்டுமே யல்லாது பிறிதொன்ருல் முடியாததாயின், யாதொன்று மறியாச் சிறியேனது பிழையின் நீக்கத்திற்கு நின்னையன்றி 'அஞ்சல்' என்பார் யார் இங்கு எனக்கு! தாக்கற்றும் முனைப்பு அற்றும் ஞானசாதனையின் வழி அறிவாக நிற்றலை விரும்பும் தமியேனை இரண்டறக் கலத்தலால் என் தனிமையினைப் போக்கும் தனித்துணையே! துயர்தரும் யாக்கையின் வலையாகிய வினையின் தினையளவு உதவியையேனும் இனியான் வேண்டேன்! தளர்ந்த காலத்திலுதவும் என் எய்ப்பில் வைப்பே! என் ஞான வாழ்க்கைக்கு வாய்ந்த முதன்மையான பொருளே! ஞானவேட்கையின் வேகத்தால் உந்தப்பட்ட யான், சிதலைக்கு விருந்தாகும் ஊன்குடிலை இனிப் பொறேன்! ஞானமயமாய நின் திருவடியினையே, ஞானத் தொண்டாற்றும் எனது புகலிடமாகத் தந்தருள்க! நின்னேடு இரண்டறக் கலக்கும் விழுமிய நெறியினை அறியாச் சிறியேனுக்கு ஞான சாதன காலத்தில் தோன்றித்தோன்றி மறைந்து இன்புறுத்துபவனே! நின் வெறிமலர்த்தாளிணை இணங்கு மன்பால் தொழுது சிதாகாயத்தில் செல்வதற்கு நல்லடியார் பால் என்னை இணைத்து விடு!

குன்றேயனைய என் குற்றங்களை குணமாகக்கொண்டு என்னை நீ கைவிடலாகாது! என்னை உடையவனே! யான் உன்னை உரைக்குமாறு நீ உணர்த்த, பாரினேர்கள் பரிந்து புகழ்ந்திட, நின்னைக் குறித்துப் பாடுவேன்! மங்கில் வளம் பெறு நின் வனப்பினைக் காண விழைந்து ஞானத்தொண்டுகள் வழி உழைக்க முற்படுவேன்! ஆனல், நின்னைக் குறித்துப் பாடமுடியாத யான் பணியேன்! சிவன் எவ்விடத்தான்? எவர் கண்டவர்? என அறிய அவாவிலனுய்

இருக்கின்றேன்! மற்றும் சிவனைப்பற்றிய சிந்தனையின் வலியால் மனமிகக் கிடந்துள்ளுருகேன்! எனினும் நின்னைக்காண கவல்கின்றேன்! என்னைக் கைவிட்டு விடுவாயாகில் நின்னை, 'வேலை நஞ்சுண் மழைதரு கண்டன்', 'குணமிலி' 'மானிடன்', 'தேய்மதியன்' 'பழைதருமா பரன்' என நின் இழிவை இடைவிடாது இசைத்துக் கொண்டிருப்பேன். அவ்வாறு யான் நின்பழியினைக் கூறுவேனாயினும், பழிக்கத் தகாத நின் திருவடிகளின் துணை கொண்டு ஞானத்தொழும்பினை இயற்றிய வழி, அத் திருவடிகளிலிருந்து சிதறி விழும் கலைகளைக் காணும் பேறும் பெறுதும், எழும் நாத ஒலியினையும் கேட்கும் வாய்ப்பினையும் அறியாதும், பிந்துவின் கலைகளை பிரணவவுச்சியிலுள்ள பிரம ரந்திரத்தின் (Ventricular cavity) மிசை இசையச் செய்யும் வகையினை உணராதும் வாளா விழித்திருந்தேன்! ஆயிரத்தெட்டு இதழ்களோடு கூடிய உந்திக் கமலமாய மோன நிலையத்தண்மையிலுள்ள சிறை நீரினைக் கடப்பதற்குச் சந்திரகலையாகிய தோணியை பிரமரந்திரத்தில் சேரச் செய்ய, தோணியை நடாத்தும் கோலையும் நீ எனக்குக் கொடுத்தும் அதன் நுட்பத்தினையு மறியாதிருந்தேன்!

ஓரோ வழி என்னைக் கைவிடுவாயாயின், ஞானமிக்குடையார், என்னை நீ யாருடை அடியான்' என வினவுவாராயின், எனக்குள் வடகிழக்கு திசையின்கண் அரையனுய் ஆண்டு விளங்கும் சிவத்தின் சீரடியார்களுக்கு அடிமை எனக் கூறி உன்னைக்குறித்து நகைக்கச் செய்வேன். வெறுப்பையுடைய உலக வாழ்க்கையினை ஒழிப்பதும், ஞானத் தொண்டினை இயற்றுவதும் சிவனைக்கண்டு சார்தற்கென்று யாங்கணும் பரவும்படி எடுத்துக்கூறுவேன்! என்னைக் கைவிடில், நின்னை அவனியுளோர் நகைக்கும் படிச் செய்வேன்! மதக்களிற்றின் தோலுரித்த பிச்சன் என்றும், புலித்தோலையுடுத்த பித்தன் என்றும், நஞ்சுண்ட பிச்சன் என்றும், இடுகாட்டில் வாழும் பித்தன் என்றும் என்னையும் ஆட்கொண்ட எத்தன் என்றும் உன்னை ஏசு

வேன்! யான் நின்னை ஏசுவதும் ஏத்துவதும், நீ, என் குற்றத்தை மனங்குழைந்து ஒழிப்பதற்காகவேயன்றி பிறிதன்று. நாதசக்தியோடு கலந்து பிரணவ நிவப்பினில் ஒளியாய் விளங்குபவனே! சிற்றுயிர்க்கிரங்கி அஞ்ஞானமாகிய இருளை சிவ வொளியால் நீக்கி ஞான வினையின் முடிவில் வெளிப்படும் அருளனுகிய கடையவனே! என்னை ஆண்டு எனக்குள்ளிருப்பவனே!

இஃதே நீத்தல் விண்ணப்பம் நுதலும் பொருளாகுமெனக.

நீத்தல் விண்ணப்பத்தில் பொதிந்த கருப்பொருள் நீட்சி, மணிவாசகரது உணர்ச்சியையும் மனேபாவத்தின் கிளர்ச்சியையும் நமதுள்ளத்தின் கண்ணே கண்கூடாக்கும் மாண்புடையது. இறைக்காட்சி, உயிரின் மெய்ம்மைக் கடமையுணர்ச்சி பால் பொறுத்து நிற்றலை, மணிவாசகர், இப் பாக்களில் உணர்த்துங்காலை, அக் காட்சி நிலை மெய்யிலிருத்தலை விளங்கச்செய்து அறிவுறுத்துகிருர். அறிவொடு புணர்ந்த மக்கள் தன்னந் தனியராய் பயிற்சி முறையுடன் தானே தேடிக்கொள்ளுதற்குரிய, எல்லை கடந்த இன்ப உறுதிப்பொருளைக் காணும் முயற்சியில் மூழ்கி நிற்பின், அன்னூர்க்கு இறையின் முழு நிலை புலனுகுமென்பது மறுக்கொணு வுண்மை. இறையின் அருட்பேறினை உயிர்கள் பெருதவாறு சில முட்டுகள் நேர்கின்றதையும், பல தடைகளும் தகைகின்றதையும் யோகக் காட்சியால் கண்டுணர்ந்த மணிவாசகர் அவற்றைக் களையவேண்டி இறையருளைக் கூவியழைக்கும் நிவேதன உறுதியினை, நீத்தல் விண்ணப்பத்தில் காணப்பெறலாகும்.

உயிர்களின் அறியாமை நீக்கத்தின் பொருட்டு, அவ்வுயிர்களுக்களிக்கப்பட்ட உடலம் உலகம் முதலாய இறைவனது கொடைப்பொருள்களின் நுண்ணிய தத்துவங்களின் உண்மையினையும், இறை கருணைவடிமாய் அருள் கொழிக்கும் இயல்பினையும், மணிவாசகர் உணர்ந்த வழி, உடலகத்தே வளர்ச்சியிருந்தாலன்றி உயிர்கள் அறிவு விளக்கம் பெற இயலாதெனக் கருத்துட் கொண்டார்.

மற்றும், அறியாமை கடந்து முழு அறிவாயொளிரும் இறையின் உயிர்ப்பு மெய்யன்பென்றும், அவ்வன்பின் வளர்ச்சிக்கு உற்ற துணை பற்றொழிவாகு மென்பதை ஒருமையுணர்வால் மணிவாசகர் உன்னி, அந் நுட்பத்தைத் திறம்பட ஒவ்வொரு திருப்பாட்டின்கண் அமைத்து கடவுட் காட்சி வழங்கும் அழகு நிலையினைப் புலப்படுத்தியுள்ளார். மற்றும் இறையருளினைக் கருதும் மெய்யன்பே, ஒளி, நினைவு இன்பம் முதலியன நிலவும் நிலையத்து அறிவின் பொற்கதவைத் திறந்து, இறை உறவையும் கலப்பையும் அளிக்குமென நிலைநாட்டு வாராயினர்.

மாயா காரியங்களின் நுண்ணிய கூறுகளை யோகக் காட்சியால் கண்டுணர்ந்த மணிவாசகர், இதயச் சக்கரத்தின் இயல்பினையும், மனச் சக்கரங்களின் மாண்பினையும் அறிந்து, தன்னை இறைவனுக்குயீந்து, தன்னை முற்றிலும் இறைக்கு உரிமையாக்குமாறு, நீத்தல் விண்ணப்பத்து பாக்கள் மூலம் இறைபால் முறையிடும் வகையினைத் தேறின், கடவுட் காட்சியைத் தகையாது புலப்படுத்துவது மெய்யின் மேன்மை என்றறியப்படும். இம்முறையீட்டின் உண்மைத் தத்துவத்தின் வழி, மெய்பாலிலங்கும் அறு வகைச் சக்கரங்களிலும் ஆழியுருட்டும் சக்திகளின் அருட் சார்பால், உயிர் மெய்ஞ்ஞான அறிவுநுகரும் ஆற்றலுற்று, ஒரு ஞான அருவிபெற, ஆர்வமிலாது ஒடுங்கிக் கிடக்கும் குண்டலி சக்தி சிவ தத்துவங்களில் அமிழ்ந்து பின் பரசிவ பிந்துவை நாடி அற்புதமான அமுத தாரையிற் புனலாட அவ்வுயிர் கன்னற் கனிதேர் களிறென, அருட்கலையோடு பரவும் அமுதத் தன்மையுடையதாய், மெஞ்ஞான மெய் விளக்கின் பின்னே போய், காட்சிக்குரிய இறையைக் காணும். எனவே நீத்தல் விண்ணப்பத்து பாக்களின் உட்கிடக்கைகளை ஆய்ந்துழி, இறைச் சக்தியின்றி அவனியில்

தனிநிலை எதற்குமிலை யென்றும், அறிவொடு புணர்ந்த உயிர்கள் அடையத்தக்க இறுதிப்பேறு அருட்கடவுள் காட்சியே யாகுமென்ற ஒன்றிய கருத்தே பெறப்படும்.

(தொடரும்.)

★ யாழ் நூல். ★

பேராசிரியர் விபுலானந்த அடிகளார் பதினன்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது தோற்றம் பொலிந்தது
விலை மலிந்தது

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

—o—

பண்டைக் காலத் தமிழும், செந்தமிழும்.

தென்னாப்பிரிகா—டர்பன் திரு. ச. மு. பிள்ளை, அவர்கள்.

மேற்கண்ட தலைப்பு பண்டைக்காலம் இன்ன தெனவும், தமிழகத்தின் பெற்றியும், வழக்க ஒழுக்கங்களும் இவையெனவும், தமிழின் சீரிய மொழி பிறிதொன் றின்றெனவும் முப் பகுதியனவாகப் பகுத்துக்கொண்டு ஒவ்வொன்றினையும் ஆராய்வாம்.

பண்டைக்காலம்.

பண்டைக்கால மென்பது முதல், இடை, கடைச்சங்கம் இருந்த காலமேயாம். இறையனார் அகப்பொருளின் உரையினைக்கொண்டு ஆராய்வார்க்கு "முரஞ்சியூர் முடிநாகராயர்" என்பார் தலைச்சங்கத்தாரெனவும், அன்னார் பாரதப் போரமைந்த காலத்தே வதிந்தவரெனவும், இரண்டாம் புறப்பாட்டானே தெள்ளிதின் விளக்கமெய்தும். இஃதேயும் அன்றி இன்னும் பற்பல காரணங்களும் இவரைத் தலைச்சங்கத்தாரென ஒப்புக்கொள்கின்றன. இன்னோரன்ன காரணங்களானும் பண்டைய புராணங்களிற் கொண்ட கொள்கையானும் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது தலைச்சங்கமென்பது ஒரு வாற்றாற் காணக்கிடக்கின்றது. இஃது ஆராய்ச்சி வல்லுநரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. இது தானும் மறுத்தற்குரிய தென்பர் பலர். ஆகலான் முதல் இடைச்சங்க காலம் உறுதியாய் நிலையுறுத்தப் படாமையானும், ஒரு சாரார் ஒரே ஒரு காரணம்பற்றி யாராய்ச்சி முகத்தாற் கூறினும் அது பலரான் தருக்கவாயிலாகக் கண்டிக்கப் பட்டு வருகின்றமையானும், அது ஈண்டைக்கு வேண்டற்பாலதன்று. எது எவ்வாறாயினும் கடைச்சங்க காலத்தைப் பொதுவகையான் இன்னதென ஆராய்வுழி, கரிகாற்சோழன், பெருநற்கிள்ளி, நெடுநல்வாடை மதுரைக் காஞ்சித் தலைவனும் நெடுஞ்செழியன், வஞ்சி நகர்ச் செங்குட்டுவன், இன்னோரன்ன பண்டைத் தமிழரசர்கள் இமிழ்திரை வரைப்பில், உயர்த்திருந்த காலமென அறியக் கிடக்கின்றது. இதுவும் மறுத்தற்கிடமென்பர். இஃதொரு புறமிருக்க எங்ஙனமாயினும் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதே கடைச்சங்க காலமென பெரும்பான்மையோரும் ஒப்புக்கொள்ளுகின்றமையின் நம் முடன்பாடும் அஃதேயாம். இக் கடைச்சங்க காலமே நமக்கு மிக்கதொரு பண்டைக் காலமாக

எடுத்துக் கோடல் அமையுமாகலின், அதனையே ஈண்டு பண்டைக்காலமென வந்துழியெங்கும் தந்துரைப்பாம்.

பிறிதொன்றுனும் நமது பண்டைக் காலத்தின் உள்ள தமிழரசர்களை யாராய்வாம். மேற்கூறிப்போந்த அரசர்களையன்றி, உக்கிரப்பெருவழுதி, இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன், சேரனிரும்பொறை, சேரமான் வேண்டுகோ, குட்டுவன் சேரல் முதலாய வேந்தர் பலரும் குறைவிலாச் செங்கோலோச்சி மிளிர்த்திருக்கின்றனர். படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுப் போதந்த நந்தமிழ்க் குடியினரான முடியுடை மூவேந்தரது வழியினராம் வேண்டிய சிறப்பனைத்து மீண்டிய பாண்டியனும் காமோர் கையறமேலோரின்றி நீலமால் வரை போற்படர்ந்த காலவேக மென்னும் வேழத்தை யொறுத்தடக்கிய சோழனும், மறக்கற்புடைப் பத்தினிக் கடவுளாங் கண்ணகித் தேவியைப் பண்ணுறவேத்த சித்திரக் கோவில் நிறுத்திய வீரவேந்தனும் சேரனும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் எக்காலத்தும் இல்லையாக விளங்கி, பீடுமிக்க மாடமால் மதுரையிற் சங்கமிருந்து தமிழாராய்ந்த பல்விசை நிறீஇய நல்லிசைப் புலவரும், அழுக்காறின்மை அவாவின்மை யென்னும் இருபெரு நிதியமுங்கொண்டு நிலையுதலுற்றவருமாகிய, இடைக்காடனார், கல்லாடனார், நக்கீரனார், கூடலூர்க்கிழார், மாங்குடிக்கிழார், மறுத்துவன்றாமோதரனார், முதலாயவர்களைச் செவ்விதின் ஓம்பிப் பண்டையோர் நட்ட தண்டமிழ்ப் பயிர்க்கோர் கொண்டலென விளங்கிய காலமும் பண்டைக் காலமாம்.

தமிழகம்.

இனிப் பண்டைக் காலத்துள்ள தமிழர்களின் ஒப்புயர்வற்ற இயல்புகளையும் அன்னாரது வழக்க வொழுக்கங்களையும் ஈண்டுச் சிறிது கூறுதும். மேற் கூறப்பட்ட கடைச் சங்க காலத்துப் புலவர்களும், அன்னாரைத் தம்முயிரொப்ப ஓம்பி வந்த வேந்தர்களும் தத்தமக் கிட்டுக்கொண்ட பெயர் மாத்திரை யானும், பட்டத்தானும் நந்தமிழகம் எங்ஙன் ஒளி பெற்றதென்பது வெள்ளிடை விளங்கலாம். அச்சீரிய தமிழகத்துட் சிறந்து வ:திந்த நந்தமிழணங்கு எத்துணை பொலிவுற்றிருப்பள். அத் தமிழணங்கின் பெற்றியினையும், அவளகத்துச் சீர்மையினையும் போற்றிடுவமெனின் நம்மொரு நாப் போதுங் கொல்லோ! நந்தமிழணங்கு வளர்ந்த நாடு ஒருபான் மூன்றென ஒரு சாரும், நாற்பானென்ப தெனப் பிறிதொரு

சாரரும் கூறுகிற்பர். இக் நாற்பாநெனுன்பதுட் பல கடலாற் கொள்ளப்பட்ட தென்பர் சிலர். இதற்கு ஆதாரமாவது,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்னும் பனுவலேயாம். எஃது எவ்வாறுயினும் தமிழ்நாடு ஒரு பான் மூன்றென்பது யாவராலும் மறுக்கப்படாதது. இத்தமிழ் நாடு முழுவதும் பிறமொழி கலவாது மொழிதலும், பெயரிடுதலும், வரைதலும், வழக்கென்பது சங்க நூற்களா லும், தத்தம் பெயரானும் விளங்கக் கிடக்கின்றது. இக் காலத்துத் தமிழ்ப்பெயரிடுதலை விடுத்துத் தமிழை மொழி வது தானும் குறைவெனப் போலி யெண்ணங்கொண்டு சில முழு மூடர்கள் பற்பல மொழிகளை விரவிவிட்டு நந்தமிழ் நாட்டின் சீரிய கொள்கையினை யறவே மாற்றி விட்டனர். அன்றியும் வடமொழியும் தென்மொழியும் விரவி வருவதை மணிப்பிரவாள நடையென்றும், அது பண்டைக்காலத்தா ரான் ஒப்புக் கொள்ளப்பட்டு வழங்கி வந்ததெனவும் சிலர் நவிலாநிற்பர். இந் நடையை இழுக்கு நடையெனக் கூறலா மன்றி வேறன்று. செந்தமிழ் இதழிலும், மணியும் பவளமுங் கலந்ததோ ரலங்கல் காட்சிக் கின்பளிக்குமாறு போலக் கேள் விக் கின்பளிக்குமெனப் போலி எண்ணங்கொண்டு புகுத்திய இம்மணிப் பிரவாள நடையினை இழுக்கு நடையென இகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙன மாறுபட்ட நந்தமிழகத் துள் இவ்வமயம் பழைய வேந்தரின் பெயரையாயினும், புலவர்களின் பெயரையாயினும் இக்காலத்து வேந்தர் புலவர் பாட்டு அமைந்திருப்பதைக் கனவினுங் கண்டிலம்! அந்தோ! இஃது எத்துணை இன்னல் தரத்தக்கது! அதுதானும் குறை வென மறுக்கப்பட்டது போலும்! இஃது மீண்டும் எழுவது எக்காளோ! கண்டிற்றிலமே! நந்தமிழணங்கும் இக் குறும் பரின் வெறும் பகட்டைக் கண்டன்றோ இன்னலுற்றுப் பின்னடைந்து மங்குகின்றனள்! இப்பரந்த உண்மையை உள்ள வாறுணர்ந்தபெரியாரும், கவிதையரும், கைம்மாறு கருதாத பொய்ம்மைவிட்ட வாய்மையருமாய சிற்சிலர், நந்தமிழகம் செவ்வனம் விளங்கப் பாடுபட்டுக்கொண்டு வருகின்றனர். இறைவன் அருளான் கைகூடி முற்றுப் பெறுவதாக!

இனி மற்றைய வழக்க ஒழுக்கங்களையும் வெளியிடப் புகின் விரியு மென்றஞ்சி இத்துடன் நிறுத்தி, பண்டைக் காலத்து வேந்தரானே வளர்க்கப்பட்ட தமிழகத்துள் நங்

தமிழணங்கு எவ்விதம் செவ்விதின் சிறப்புற்றிருந்தனள் என்பதையும், அவளது பெற்றியினையும் ஒரு சிறிது வரைவாம்.

தமிழ்.

பண்டைத் தமிழ் வேந்தர்கள் தமிழ்வல்ல புலவர்களை அமைச்சரெனக் கொண்டு, அவர்வழி நின்று தம் அரசையும் தமிழையும் போற்றி வளர்த்தனர் என்பது புறநானூறு முதலான நூல்களான் இனிது போதரும். அப்புலவர்களும் தமிழின் சுவையுள்ள பிறிதொரு மொழி இன்றெனுங் கொள்கையுடையாராயும் இருந்து வந்தனர். உலக இயற்கைப் பொருளின் இயல்பை ஆராய்ந்து அதன் இன்பத்தை எய்து பொருளின் இலக்கணங்களை விரித்துரைக்க நூல் ஒன்று வேண்டும். அவ்வகைப் பொருளிலக்கணம் ஏனைய மொழிகட்கின்றி நஞ்சீரிய தமிழுக்கே சிறப்பாக அமைந்துள்ளது. அது தானும் அகப்பொருள், புறப்பொருள் என இருவகைத்தாகும். அவ் வகப்பொருள் தானும் எல்லாம் வல்ல இறைவனாலேயே ஆக்கப்பட்ட தெனின் அதன் பெருமை கூறவியலுமோ? அன்றியும் ஆலவாயின் அவிர்சடைக் கடவுளே மனித உருக் கொண்டு இறையனாரென்னும் பெயர்பெற்று, மற்றைத் தமிழ் புலவரோடு சங்கமிருந் தாராய்ந்தானெனின் இதன் சிறப்புக் கூறவும் படுமோ? இது.

"கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோடமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்தவிப் பசுந் தமிழேனை, மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல், எண்ணிடைப் படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ" என்று பரஞ்சோதி முனிவராலும் போற்றப் பட்டிருக்கின்றதை யுணர்க. நிற்க ஒரு காலத்து ஆரியம் வல்ல கொண்டான் என்னுங் குயவன் பட்டி மண்டபம் இவர்ந்து "ஆரியம் நன்று தமிழ் தீது" என்று கூற, இக் கரு மொழிகளைக் கேட்ட நக்கீரனார் தனியாத் துன்புற்று அந்தோ! ஆரியமே! தமிழைச் சிறப்புடைய மொழியென உடன்படா திற்க ஈங்கிவன் இழித்துக் கூறிய தென்னை, இவன் இறக்கும்படிச் செய்வல் என

முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரணக பிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக்குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்க்க சுவாகா.

என்னும் வெண்பாவைக் கூற ஆண்டே வீழ்ந்து, கொண்டான் இறந்தனன். இறந்துபடுதலும் அதனைக்கண்ட ஆண்டுள்ளார் வேண்ட அதனுக்கிரங்கி நமது நக்கீரனார்.

"ஆர்யம் நன்று தமிழ்தீதென வுரைத்த
காரணத்தாற் காலக் கோட்பட்டானை—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனாராணையால்
செந்தமிழே தீர்க்க சுவாகா"

என்னும் வெண்பாவைப் பாடினார். கொண்டானும் உயிர்த்தெழுந்தனன். இதனானும் நமது தீந்தமிழ் ஒப்புயர்வற்றதென்பது குன்றிடை விளக்கமாம். இனி, தருமிக்குப் பொற்கிழி யளிக்க 'கொங்குதேர் வாழ்க்கை" என்ற செய்யுள் பாடியதும் பெரிய புராணங் கூறச் சேக்கிழார் சாமிகட்கு "உலகெலாம்" என்றடியெடுத்தீந்ததும் இறைவனே யன்றோ! இவை தாமும் தமிழே அன்றோ! மற்றும் இறைவனைத் தூதாக விடுத்ததும், முதலைவிழுங்கிய மதலையை அழைத்ததும், என்பைப் பெண்ணாக்கியதும், மறைக்காட்டுக் கதவினைத் திறந்ததும். சைவந்தழைத்தோங்க திருவவதாரஞ் செய்த சமய குரவர் நால்வரும் திருவாய் மலர்ந்த தேவார திருவாசகமும் தமிழே யன்றோ! இதுபற்றி யன்றோ நமது முற்றத் துறந்த பரஞ்சோதி முனிகளும் "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை யுண்ட பாலனை யழைத்ததும், எலும்பு பெண்ணுருவாக் கண்டதும், மறைக்கதவினைத் திறந்ததுங் கன்னித் தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இனி இச் சமய குரவர் தம் தமிழ் வேதமுறுஞ் சிறப்பிற்கு ஏனைய வேதங்கள் ஒப்பாகாவென்பதே ஆன்றோர்களின் துணிபு. இதைப் பவப்பிணி நீக்குஞ் சிவப்பிரகாசரும் திருவாசகத்துக்கும் வேதத்துக்கும் ஒப்புயர்வு கூறு முகத்தானே.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணனுரை யெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர் வாய்ப்பிறந்த வாசகத்தேனோ
யாதோ சிறந்த தென்கு வீராயின்
வேத மோதின் விழிநீர்ப் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவாசக மிங் கொருகால் ஓதின்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே"

என்ற அகவலையோதித் தமிழ் வேதத்தின் பெற்றியினை விரித்தருளினர். இனித் தமிழின் பெருமையினை விரித்தெழுதப் புகின் அடங்காது விரியுமாகலின் இதனையொரு தனிக் கட்டுரை வாயிலான் விரிப்பாமென இம்மட்டோடு நிறுவி முடிவுரை முகவுரை வரைகின்றேன்.

பெரியோர்களே! மேற்கூறிப் போந்த வற்றான் விளக்கமாகும் பொருள்களாவன :— பண்டைக்காலம் இன்னதென்பதூஉம், அதனினும் கடைச் சங்ககாலம் இன்னதெனபதூஉம், அக்காலத்து செங்கோலாச்சிய தமிழரசர்கள் இன்னாரென்பதூஉம், இவர்கள் ஓம்பிவந்த தமிழ்ப்புலவர்கள் இன்னாரென்பதூஉம், இப் புலவர்கள் நங்கன்னித் தமிழை எங்ஙனம் போற்றிவந்தா ரென்பதூஉம், அதனான் நந்தமிழகம் எத்துணைச் சிறந்த தென்பதூஉம், அத் தமிழகத்துள் பழந்தமிழ் வேந்தர்கள் செய்த அரசியல் முறையும், அன்னாது வழக்க ஒழுக்கங்களும் இன்னவென்பதூஉம், பழய காலத்து நமது கற்புடைய தமிழ்ப் பெண்மணிகள் தங் கற்பை நிலைநாட்டிய வகை இன்னவென்பதூஉம், கணவனையினறிப் பிறிதொரு தெய்வம் பேணாமல் இருந்ததூஉம், நம் கன்னித் தமிழின் பெருமை இன்னதென்பதூஉம, பிறவுமாவன.

இனித் தமிழ் நாவலர் சரிதையுள் கம்பர் காளிங்கனைப் பாடிய பாட்டு ஒன்று காணப்படுவதென்றும், அது பாடி ஈன்ற வெருமை ஆயிரம் பெற்றமை குறிப்பதோர் குறிப்புண்டென்றும் கூறி, அவற்றால், கம்பர், முன்பும் காளிங்கனைப் பாடியிருத்தல் கூடுமெனிற் கூறுவேன். கம்பர் இளமை கழிந்து வியத்தகு புலமையுற்று, நயத்தகு சோழன் அவையகத்து நாயகமாய்த் திகழ்ந்த காலத்துச் சோழன்பால் இருகால் மனம் வேறுபட்டுப் பிரிந்தனர் என்பது தமிழ் நாவலர் சரிதையாற் பெறப்படுவது; முதன்முறை பாண்டிய நாடு சென்று மீண்டனர்; பின்னர் ஒருகால் கரிவுற்றுழி தொண்டைநாடு கடந்து பிரதாபருத்திரன்பாற் சென்றனர் என்பது. அப்போது வல்லி வீட்டுக்கு எருமை வாங்கிவரப் போய்க் காளிங்கன் நிரைமேய்ப்பானைக் கண்டு அவன் பேரிற் பாட்டுச் சொல்ல, அவன் ஈன்ற எருமை ஆயிரங் கொடுத்தான் என்க. இதனால் அவர் முதிர்பருவத்தே சென்றமை புலப்படுவதன்றி மிக்க இளமைப் பருவத்துச் சென்றிலாமை தோன்றுவது காண்க.

(64-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"சுனைவாய்ச் சிறு நீரை எய்தாது என்று எண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும சுரமென்ப காதலர்
உள்ளம படர்ந்த நெறி," என்பதே அப்பாட்டு.

ஒருவர் மற்றவருக்காகக் கொடை அளிக்கும் வாழ்வு—அன்பினுல் இனபமடையும் வாழ்வு.

கருத்தொருமித்த காதலரிடையே தான் சிறந்து விளங்கும். இன்று இங்கே நடக்கும திருமணம் காதல் மணம என்பதை அறிவார்கள். உயர்ந்தது, சிறந்தது, இனியது எனத் தமிழர் கண்ட மணம காதல் மணமே, நம பண்பாட்டின் சிறப்புக்கு, பழமையின் புதுமைக்கு, கலைகளின் தோற்றத்திற்கு, வாழ்வின உயர்வுக்குக் காரணமாயிருந்தது காதல் மணமே. இத்தகைய காதல் மணத்தை இக்காலததில் நம நாட்டில் காண்பதே அருமையாகிவிட்டது. உண்மைக் காதலுக்கு இனி இடமில்லை என்று கூறத்தக்க நிலை உண்டாகியிருக்கிறது. பணம், பதவி, குலம, குடி முதலிய காரணங்களாலேயே திருமணங்கள் நடைபெறுகின்றன. இதனுலே, நம் நாட்டுக் குடும்பங்கள் பலவற்றிலே அன்பையும் இன்பத்தையுங் காணமுடியாதிருக்கிறது. பிரிந்து வாழுதற்கு விருமபி, நீதி மன்றஙகளுக்குச் சென்று முறையிடும கணவர், மனைவிமார் தம தொகை, நாளுக்கு நாள கூடிக்கொண்டே போகிறது. ஆகவே பணத்துக்கும குலத்துக்கும அடிமையாகி இனபவாழ்வைச் சிதைக்கும மடமையை நம நாட்டிலிருந்து அகற்ற வேண்டும ; காதல் வாழ்வை நனகு மலரச் செய்தல் வேண்டும்.

மேலும் காந்தியடிகள் வகுத்த முறைப்படி இன்று நடக்கும் இத் திருமண முறை நம நாடெங்கும் பரவுதல் நன்று. அறியாமையாலும் அகங்காரத்தாலும அளவின்றிப் பணத்தைச் செலவு செய்து திருமண விழாக்களை நடத்தும் வழக்கத்தை ஒழித்துவிடல்வேண்டும். திருமணச் செலவுக்காகக் கடன்பட்டுப் பின்னர்க் அல்லற்படும குடும்பங்களைக் கணக்கிட முடியுமா ? அளவின்றி ஆடை அணிகளுக்குச் செலவு செய்துவிட்டு அவலப் படுவோர் எத்தனை பேர் ? திருமணா

என்று அணியும் கூறையை நூற்றுக் கணக்கில் பணத்தைக் கொட்டி வாங்கிப் பின்னர் அதனையெடுக்காது பெட்டிக்குள் வைத்துப் போற்றும் மடமைதான் என்னே! 'வாழ்க்கைத் துணை' என வள்ளுவர் போற்றும் பெண்கள் பலர் இக்காலத்திலே "வாழ்க்கைப்பார"மாக இலங்குகிறார்கள். குடும்பச் சிறப்புப் பெண்ணையே பொறுத்துளது.

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை" (என்பது தமிழ்மறை)

பெண்களுக்கு வேண்டியன பல்வகைப் பட்டாடைகளும் ஆபரணங்களுமல்ல; மனைமாட்சியும், வருவாய்க்குத்தக வாழுதலுமே என்பதைப் பலர் மறந்துவிட்டனர். அன்பு மலர்ந்து இன்பம் பெருகி அருள் ஓங்குதற்குச் சிக்கன வாழ்வும் இன்றியமையாதது.

நமது காரியாசிரியர் திருவாளர் கந்தையா அவர்கள் எளிமையான தூயவாழ்வு நடத்துபவர். அவருடைய வாழ்க்கைத் துணைவியாகிப் பொதுநலத் தொண்டு புரிதற்கு முற்பட்ட திருநிறைசெல்வி இராசநாயகியின் பெருங்குணம் போற்றத்தக்கது. ஆடம்பரத்தையும் ஆரவாரத்தையும் நாகரிகம் என்றெண்ணி அலைபவர்களுக்கு "வையத்தில் வாழ்வாங்கு" வாழும் முறையை இவர்களுடைய காதல் வாழ்வு புலப்படுத்தும் என்றெண்ணுகிறேன். ஒன்றுபட்ட உள்ளத்துடன் தொண்டுசெய்யும் பணியில் ஈடுபட்ட காதலரின் வாழ்வில் அன்புண்டு, அறமுண்டு, அழகுண்டு, இன்பமுண்டு, எல்லாமுண்டு என்பதை இவர்களுடைய குடும்பவாழ்வு எடுத்துக் காட்டுவதாக. இவ்விருவரும் சிறப்பாக இல்லறம் நடாத்தி, விரும்பிய பேறுகளைப் பெற்றுப் பல்லாண்டு வாழ்வாராக.

வாழ்க கந்தையா—இராசநாயகி!

வாழ்க தமிழ் மறை!

வாழ்க உலகம்!

துன்ப நிலை.

வித்துவான் திரு. மு. சடகோபராமாநுசம் பிள்ளை அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

திருவாளர் ஆ. பூவராகம் பிள்ளையவர்கள் 27–5–'53உ புதன்கிழமை இரவு 4-மணிக்குத் தன் பூதவுடலை நீத்துப் புகழுடலை யெய்தினர். இச்செய்தி கேட்டுத் தமிழுலகம் துன்பக்கடலில் ஆழ்ந்துள்ளது அவர்கள் சிறிதுகாலம் நோய்வாய்ப் பட்டிருந்து குணமடைந்து வந்து பின்னர் ஒருநாள் காய்ச்சலால் தம்மில்லில் உயிர் துறந்தார்கள். அவர்கள் இழவு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஓர் பேரிழவாகும். அப் பல்கலைக் கழகம் ஒரு பேராசிரியனை இழந்தது; இலக்கணக்கடலை இழந்தது; இலக்கிய நயங்களை எளிமையாகவும் இனிமையாகவும் இயம்பும் எழில் பேராசானை இழந்தது; சமய தத்துவ ஞானியை இழந்தது; மாணவர்கட்குப் பாடம் கற்பிப்பதில் விளக்கமும் தெளிவும் அமையச் சொல்லும் மாண்பார் மன்னனை இழந்தது. வைணவ உலகம் ஒரு கண்ணை இழந்தது. பொதுவாக நந் தமிழ் நாடு பெரும் புலவனை இழந்தது. அவர்கள் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். உயிர் அமைதி அடைவதாக.

இங்ஙனம் சீரும் சிறப்பும் அமையப் புலவர் திலகமாய் அறிவுக்கடலாய் விளங்கிய அவரது வரலாறு தமிழ்நாடு அறிய வேண்டுவது இன்றியமையாதது என்பது கருதி சுருங்கிய அளவில் இங்குத் தரப்பெறுகிறது.

இவர்கள் சிதம்பரம் அயன் வேளாளர் தெருவில், வேளாளர் மரபில், வழி வழியாகத்திருமால் அன்பு, அடியவர் அன்பில் சிறந்து விளங்கிய செல்வக் குடியுள் ஆதிமூலம் பிள்ளை என்பார்க்கு 27—11—1899-ல் தோன்றினர். இளமையில் சிறிது சிதம்பரம் ஆறுமுக நாவலர் பள்ளியிலும், நடுநிலைப் பள்ளியிலும் ஆரம்பக் கல்வியோடும் சிறிது ஆங்கிலமும் பயின்றார். திருவருட் செயல் வேறாகவிருந்தது. குடும்பம் வறுமை நிலைக்குள்ளாயது. தந்தையொடு பிறந்த-வைணவ திலகமாகிய-வைணவத்திற்கு வழிகாட்டியாக-இருந்த இவ

ரது பெரிய தந்தையார் திருவாளர் கோவிந்த பிள்ளையென்பார் இறைவன் திருவடி எய்தியமையின் குடும்பம் பிரிவுற்றது. குடும்ப நிலை காரணமாக இவரது தாய் பிறந்த பெருங்காலூர் என்ற கிராமத்திற்குச் சென்று அங்கு இயற்கையாகவுள்ள திண்ணைப் பள்ளியில் சிறிது காலம் பயின்று வந்தார். பின்னர் தந்தையாரோடு அவர்தம் குடும்பம் சிதம்பரத்திற்கு மீண்டும் வந்தது. அவர் தந்தையாருடைய குறைந்த ஊதியத்தில் ஆங்கிலம் படிக்க இயலாததால் தமிழ் பயிலலாமென்ற முடிவுக்கு வந்தார். அம்முடிவே அவர் வாழ்க்கையின் உயர்நிலைக்குப் பெருங் காரணமாயிற்று. இந்நிலையில் வைணவ சம்பந்தமாக ஒரு கல்வி நிலையம் அமைக்கவேண்டுமென்று பெரியார் பலர் முடிவு செய்தனர். இம்முடிவை ஏற்றுப் பல வைணவச் செல்வர்களது உதவியைக்கொண்டு "ஸ்ரீமத் இராமாநுஜ தரிசன வித்தியா சாலை" என்ற பெயரோடு ஒரு கல்வி நிலையம் 1915-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது அதற்குப் பெருங் காரணமாக இருந்தவர் புவனகிரி அழகிய மணவாள ஏகாங்கி சுவாமிகளாவர். இக்கல்வி நிலையத்திற்குத் தலைமை ஆசிரியராகத் திருவாளர் கோ. சுந்தரராமாநுஜ சுவாமிகள் நியமிக்கப் பெற்றார்.

இங்ஙனம் இக் கல்வி நிலையம் தோன்றியதையும் குடும்பத்திற்கு மிக நெருங்கிய தொடர்புடையவராய உயர்திரு சுவாமி அவர்கள் தலைமை ஆசிரியராக அமைந்த செய்தியையும் அறிந்த பிள்ளை அவர்களின் தந்தையார், அவர்கள்பால் அனுப்பிக் கல்வி பயிலுமாறு செய்தனர். மாணவராகச் சேர்ந்த பிள்ளை அவர்களும் மாணவர்க்கமைந்த இலக்கணத்தோடு ஆசிரியர்பால் மிக்க அன்பாகக் கேட்டவை கேட்டவை விடாது உளத்தமைத்துக் கல்வி பயின்று வந்தார். பயின்று வருங்கால் இவரது அறிவின் நுணுக்கம் விளக்கம் தெளிவு இவற்றைக்கண்ட ஆசிரியர் இவர்பால் அன்பாக இருப்பார் என்பது கூற வேண்டுவதில்லை. வழக்கம்போல் ஆசிரியர் மாணவர்களைக் கேள்வி கேட்பார். அக்கேள்விகட்கெல்லாம் விடாது விடை இறுப்பார்; ஆதலால் இவரை ஆசிரியர் கேள்வி கேட்பதைக் கூட நிறுத்திவிட்டார். பொதுவாகச் சொல்லுவோமானால் இவரிடம் வந்த கேள்விகள் வேறு மாணவரிடம் செல்லா. ஒருகால் இவருக்கு விடை சொல்ல இயலவில்லையென்றால்

(தொடரும்.)